**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**Case No. MCOP. 2 /2022**

**Deposition of P.W.2**

Name : டாக்டர். திரு. ரமேஷ்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: **19.09.2025**

**முதல் விசாரணை–**

நான் தற்போது நாகர்கோவில், திரவியம் மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றி வருகிறேன். 07.09.2020ம் தேதி 18 வயது மதிப்புடைய பிரிட்டோ என்பவர் சாலை விபத்தில் காயமடைந்து சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவரை பரிசோதித்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1) வலதுமணிக்கட்டு பகுதியிலும், முழங்கை பகுதியிலும் வீக்கம் காணப்பட்டது. கை பகுதிகளை அவரால் அசைக்க இயலவில்லை

2) வலது பாதத்தின் அடிப்பகுதியில் 10 x 4 x எலும்பு அளவு ஆழத்தில் சிதைவு காயம் காணப்பட்டது. காயத்தின் வெளியே உடைந்த எலும்புகள் வெளியே தெரிந்தன. அவருக்கு நுண்கதிர் படம் எடுத்து பார்த்ததில் மேற்குறிப்பிட்ட இரு காயங்களிலும் எலும்பு முறிவுகள் கண்டறியப்பட்டது. மேற்படி காயங்கள் கொடுங்காயம் என சான்று வழங்கினேன். காயம்பட்டவரின் வலது கை செயலிழந்து விட்டது. காயம்பட்டவருக்கு வலது கையால் எந்த வேலையும் செய்ய முடியாது. எழுதக்கூட முடியாது. என்னிடம் காட்டப்படும் மருத்துவமனை ரசீதுகளில் எங்கள் மருத்துவமனையில் வழங்கப்பட்ட ரசீதுகளும், அனந்தபுரி

மருத்துவமனையில் வழங்கப்பட்ட ரசீதுகளும் உள்ளது.

**<u>3வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

காயம்பட்டவருக்கு இரண்டு காயங்கள் தான் ஏற்பட்டுள்ளன. மருத்துவர் திரவியம் காயம்பட்டவருக்கு சிகிச்சை அளித்தார் என்றால் சரிதான். எங்கள் மருத்துவமனையை தவிர வேறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தால் அது பற்றி எங்களுக்கு தெரியாது. எங்கள் மருத்துவமனையிலிருந்து செப்டம்பர் 27ம் தேதி விடுவிக்கப்பட்டு மீண்டும் நவம்பர் 29, 2020ல் மருத்துவ சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். மீண்டும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு டிசம்பர் 5, 2020ல் விடுவிக்கப்பட்டார். மேற்படி தேதிகளில் சிகிச்சை பெற்றதாக மனுதாரருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 15.06.2021ம் தேதி எங்கள் மருத்துவமனையில் இறுதியாக வெளிநோயாளியாக சிகிச்சை பெற்ற போது அவரது கை செயலிழந்த நிலையில் தான் இருந்தது. தற்போதைய நிலை பற்றி எனக்குத்தெரியாது. மனுதாரருக்கு அதிக இழப்பீடு கிடைக்க வேண்டுமென்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவரது கை செயலிழக்க வில்லை என்றால் சரியல்ல.